Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113
அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்
facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org
பார்வை - 57 ஐப்பசி, 2022 பக்கங்கள் - 18 விலை - ரூபா 20.00




- போதைப் பொருள்களால் பாதை மாறியவர்களுக்கு மறுவாழ்வு நிச்சயம்
- ஆபத்தான விளிம்பில் நிற்கும் தென்மராட்சி
- நினைவேந்தல்களில் அரசியல் பேசக் கூடாதா?

ஆய்வு - அறிவு - நிமிர்வு

# மண்ணும் மரபறிவும்

தமிழ்நாட்டின் நெய்தல் நில மக்கள், குறிப்பாக கடலோடிகள் குறித்து ஆய்வு செய்து தொடர்ந்து எழுதியும், பேசியும் வருகின்றவர் கன்னியாகுமரியில் வாழும் முனைவர் வறீதையா கான்ஸ்தந்தின். பேராசிரியர், கடல் சூழலியல் மற்றும் வள அரசியல் ஆய்வாளர் எனும் பின்னணி கொண்டவர். தமிழகம் நன்கறிந்த கட்டுரையாளர், பல நூல்களின் ஆசிரியர், மீனவர்களின் பிரச்சனைகளை எளிய நடையிலும் இலக்கியமாகவும் பதிவு செய்திருக்கிறார். மண்ணும் மரபறிவும் தொடர்பில் எழுத்தாளரும் சூழலியலாளருமான வறீதையா கான்ஸ்தந்தின் அவர்கள் 'சூழல் அறிவோம்' அமைப்பை சேர்ந்த சூழலியல் செயற்பாட்டாளர்கள் மத்தியில் பகிர்ந்து கொண்ட விடயங்கள் வருமாறு.

நான் கடல் குறித்து இயற்கை குறித்து தேட தொடங்கினேன். ஆழிப் பேரலை பேரிடரில் இருந்து எழுதத் தொடங்கினேன். ஒவ்வொரு துறை சார்ந்த சமூகமும் தனக்கே உரித்தான தனித் தன்மையுடன் வாழ்கிறது என்று சொன்னால், அந்த நிலத்தில் இருக்கின்ற இயற்கை சார்ந்த வளங்கள், அது சார்ந்த தொழில்கள், அந்த வளங்களையும் தொழில்களையும் சார்ந்த உணவு முறை, இவை சார்ந்த ஒரு வாழ்க்கை முறை, இவை எல்லாவற்றையும் சார்ந்த ஒரு மரபறிவு என்பவற்றைக் கொண்டு அது வாழ்கிறது என்று அர்த்தம். அந்த மரபறிவு வாழ்க்கை முறை என்பது குறிப்பிட்ட சமூகத்தின் பண்பாட்டு அடையாளமாக மாறி விடுகிறது.

உதாரணமாக, ஒரு சூழலியல் தேவையாக, இயற்கையின் தேவையாக குளங்களை நாங்கள் பார்க்கிறோம். அதனோடு சேர்ந்து பல்வேறு சமூகங்களின் பொருளாதாரத்தின் மூலமாக, ஆதாரமாக அவை இருக்கின்றன என்பதை பொதுவாக நாம் கவனிப்பதில்லை. ஒரு குளம் சிதையும் போது அதனை சார்ந்திருக்கின்ற பல்வேறு பறவைகள் உள்ளிட்ட உயிரினங்கள் இறந்து விடுகின்றன. குளத்தில் தண்ணீர் இருக்கும் போது குளத்துக்கு பக்கங்களில் இருக்கின்ற கிணறுகளிலும் நல்ல தண்ணீர் கிடைக்கும். குளம் சிதைவடையும் போது கிணறுகளில் தண்ணீரும் இல்லாமல் போய் விடும். குளத்தை சார்ந்து பல்வேறு செயற்பாடுகள் தொழில்கள் கூட இடம் பெறும். அரசுகளும் அரச அதிகாரிகளும் இந்த மண் சார்ந்து வாழும் மக்களின் வாழ்க்கையை புரிந்து கொள்ளத் தவறி விடுகின்றார்கள். மலையில் தொடங்கி மருத நிலம், சமவெளி நிலம் என்று பின் சிதைவுகளின் நீட்சி இறுதியாக கடலில் வந்து சேர்கிறது.

ஒரு பேரிடர் குறிப்பிட்ட இடத்தில் வருகிறது என்றால் முதலில் ஒரு இடர் எப்படி நடக்கிறது என்று பார்ப்போம். இயற்கை அனர்த்தம் (natural disaster) என்று தவறாக சொல்கிறோம். இயற்கை ஒரு போதும் பேரழிவை ஏற்படுத்தாது. ஆனால் இயற்கை சீற்றமடையும், பின்பு அது தணியும். எப்போது ஒரு இயற்கை சீற்றம் பேரிடராக மாறுகின்றது என்றால், இயற்கையை அது வரை மனிதன் கையாண்டு வருகின்ற முறைகளில் உள்ள குறைபாடுகள் தான் இயற்கை சீற்றத்தை பேரிடராக மாற்றுகிறது. ஒரு பேரிடரை தடுக்க முடியாது என்றால் அதன் தாக்கத்தை எவ்வாறு குறைக்க முடியும். ஒரு பேரிடரின் பாதிப்புகளை எவ்வாறு மட்டுப்படுத்த முடியும்? பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களை எவ்வாறு விரைவாக மீட்க முடியும்? அவர்களை எப்படி விரைவில் இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு வர முடியும்? இப்படி எல்லாவற்றையும் சேர்த்தது தான் பேரிடர் மேலாண்மை என்பதாகும்.

நிலத்தை அதன் சூழலியலை ஆழமாக புரிந்து கொண்டு அந்த சூழலோடும் நிலத்தோடும் தங்களை இணைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த மக்களின் மரபறிவை கவனத்தில் கொள்ளாத எந்த மேலாண்மை திட்டமும் பயன்தராது. அது எதிர் விளைவுகளை (counter productive) ஏற்படுத்துகின்றது. கடந்த கால வரலாறுகளில் இருந்து நிறைய மேற்கோள்களை பார்க்க முடியும். சுனாமி வந்தது. நிறைய மக்கள் இறந்து போனார்கள். இதற்கு தமிழக அரசின் எதிர்வினை எப்படி இருந்தது? தமிழக கடற்கரை முழுவதும் தடுப்புச் சுவர் கட்டி சுனாமிப் பேரலையின் பாதிப்பிலிருந்து இந்த மக்களை காப்பாற்றுவோம் என்று சொல்கிறது. இது சரியான தீர்வா?



கடல் என்பது சீறும் பின் ஆறும் என்பார்கள். அது கரையை தொட்டு வருவதற்கு குறிப்பிட்ட இடம் வேண்டும். சிறிய குழந்தைகள் இருக்கும் வீடுகளில் எங்கேயும் போய் விளையாட வேண்டாம் என்று அவர்களை கட்டிப் போட்டால் என்ன செய்வார்கள்? அவர்கள் கேட்க மாட்டார்கள். அவர்கள் விளையாடுவதற்கும் இடம் கொடுக்க வேண்டும். அதே போல கடலும் தரையும் அவை தம் எல்லைகளோடு தழுவியும் விலகியும் உறவாடுகின்றன. இதனை நாங்கள் புரிந்து கொள்வதில்லை. ஒரு ஆற்றுக்கு தரை எவ்வளவு முக்கியம் என்று நாம் புரிந்து கொள்வதில்லை. ஆற்றின் இயல்புக்கு மாறாக ஆழப்படுத்தும் போது அந்த ஆறு எவ்வாறு சிதைந்து அழிகின்றது என்பதைக் குறித்து நாம் கவலைப்படுவதில்லை.

தற்காலிக பலனுக்காக நீண்டகால பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். நம் கண் முன்னால் மலைகள் சிதைந்து கொண்டிருக்கின்றன. கடற்கரை மக்கள் கல்லை கொண்டு வந்து இங்கே போடாதீர்கள். துறைமுகங்களை கட்டாதீர்கள் என்கிறார்கள். கடலுக்கும் கரையோர மக்களுக்குமான உறவென்பது கரையில் கற்களை அடுக்கிய போது இல்லாமல் போனது. இனி கடலில் காலும் நனைக்க முடியாது. காற்று வாங்கி இளைப்பாறவும் முடியாது. ஆயிரக்கணக்கான மக்கள் கடற்கரைகளை ஒட்டி வாழ்கின்றார்கள். கடல் சீற்றம், அலைச் சீற்றம் காலத்தில் அந்த மக்களால் கடலை தொட முடியவில்லை. எல்லா இடங்களிலும் மனிதனுக்கும் சூழலுக்குமான மோதல் இருந்து கொண்டே இருக்கிறது. இயற்கையை பாதுகாப்பதற்கு இயற்கை அரண்களையே சார்ந்திருக்க வேண்டும் என்கிற புரிதலை நாங்கள் ஏற்படுத்த வேண்டி இருக்கிறது.

பேரிடர்கள் ஏற்பட்ட போது ஏன் அதிகளவில் மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்றால், இயற்கை சீற்றம் பேரிடராக மாறுவதற்கு முன்னரேயே அந்த மக்களின் கட்டுப்பாட்டை மீறிய பல செயற்பாடுகள் அந்த சமூகத்தையே பலவீனப்படுத்தி இருக்கும். ஏற்கனவே பலவீனப்படுத்தப்பட்டிருந்த மக்கள் இப்படியான பேரிடர்களால் இன்னும் நலிவுற்றனர். ஒரு பேரிடர் வரும் போது அந்த இடம் முழுவதுமே பாதிக்கப்படும். அது பணக்காரர்களையும் சாதாரண மனிதர்களையும் ஒரே மாதிரி பாதிப்பதில்லை. குழந்தைகளையும் வயதானவர்களையும் ஒரே மாதிரி பாதிப்பதில்லை. நான் சுனாமி பேரழிவின் போது தமிழக கடற்கரையின் பல இடங்களுக்கும் சென்று பார்த்தேன். பேரழிவு என்று வரும் போது பெண்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். சூழலியலோடு பெண்ணியத்தை சேர்த்து பேச வேண்டி இருக்கிறது.

சூழலியலோடு வரலாற்றைப் பேச வேண்டி இருக்கிறது. சூழலியலோடு நிலவியலை பேச வேண்டி இருக்கிறது. இலை அழகாக இருக்கிறது, பூ அழகாக இருக்கிறது, கனி அழகாக இருக்கிறது, மரம் அழகாக இருக்கிறது என்று வியந்து பேசி விட்டு ஒதுங்கி விடுவதல்ல சூழலியம். இன்று இயற்கையை கணிக்க முடியவில்லை. இயற்கை கணிப்புக்கும் அப்பால் போய் விட்டது. காலநிலை மாற்றத்தில் குறிப்பாக மழைவீழ்ச்சி அன்றைய காலம் போல் இன்று ஒழுங்காக இல்லை. 80 நாளில் பெய்ய வேண்டிய மழை 30 நாளில் கொட்டித் தீர்க்கின்றது. என்ன செய்வது? அந்த மழையை தாங்கிப் பிடிக்க நிலம் தயாராக இல்லை. கொங்கிறீற் சுவர்களை கட்டியெழுப்பி போதாக்குறைக்கு நிலத்துக்கும் கொங்கிறீற் போட்டு மூடி விடுகிறோம். மழைத்தண்ணீர் தேங்கி கசிந்து நிலத்துள் இறங்க வாய்ப்பு இருந்தது. பல வீடுகளில் தரைகளை இப்போது சீமெந்தால் மூடிய பிறகு மழை நீர் மண்ணுக்குள் புக வாய்ப்பே இல்லாமல் போய் விட்டது. உலகத்தின் ஒட்டு மொத்த நீரையும் ஒற்றைக் கட்டுமானமாக பார்க்க வேண்டும். ஏரிகள், குளங்களை எல்லாம் ஆக்கிரமித்து கட்டிடங்களை கட்டினோம். தண்ணீர் செல்லும் பாதைகளையும் பறித்தோம். மழைத் தண்ணீர் எங்கே போவது? அது தான் இயற்கையுடன் மனிதர்களின் ஊடாட்டத்தில் ஏற்பட்ட விபத்து. ஒன்று இரண்டு இஞ்சி அளவு மண் உருவாகவே ஆயிரம் ஆண்டுகள் செல்கின்றன என்கிறது விஞ்ஞானம். அந்த மேல் மண்ணை கனரக இயந்திரங்களை பயன்படுத்தி அள்ளிப் போடுகிறோம். பின்பு அந்த மண்ணிலே பயிர்கள் வளராது. உயிர்ச் சத்துக்களும் நீர் சத்துக்களும் இருந்தால் தான் தாவரங்கள் உருவாக முடியும். ஒவ்வொரு இடத்துக்கும் தனித்துவமான பண்புகள் இருக்கின்றன.

இயற்கையோடு சேர்ந்து வாழ்கின்ற மக்களுக்கு அனர்த்தங்கள் பெரிய பாதிப்புகளை கொடுக்காது. இங்கே 16000 மக்கள் இறந்த போது அந்தமானில் வாழும் பழங்குடி மக்கள் 263 ஆயிரம் பேரில் ஒருவர் கூட இறக்கவில்லை. இயற்கையின் முன்னறிவித்தலை பின்பற்றி தங்களை தற்காத்துக் கொண்டார்கள். இயற்கை எமக்கு எளிமையான வாழ்க்கையை கற்றுத் தருகிறது. நமது நுகர்வு வெளியை குறைத்துக் கொள்ள வேண்டும். அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்தக் கூடிய பொருள்களின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ள வேண்டும். தேவையில்லாத எல்லா பொருள்களையும் வீட்டில் வாங்கி குவித்துவிட்டு பின் வீட்டில் இருக்க இடமில்லாமல் அலைந்து திரியும் வாழ்க்கையில் இருந்து நாங்கள் படிப்படியாக விடுபட வேண்டிய தேவை உள்ளது.

தொகுப்பு : அமுது

# போதைப் பொருள்களால் பாதை மாறியவர்களுக்கு மறுவாழ்வு நிச்சயம்




2009 க்குப் பின்னர் திட்டமிட்ட இனவழிப் பின் ஒரு பகுதியாக தமிழர் தாயகத்தில் இளையோர் மத்தியில் போதைப்பொருள் பாவனை ஊக்குவிக்க ப்பட்டு வருகிறது. அதனை அதிகாரத்தில் இருக்கும் தமிழர்களும் கண்டும் காணாமல் இருப்பது தான் வேதனையளிக்கிறது. இப்போது வடக்கு-கிழக்கில் ஆண்கள் பெண்கள் என இரு பாலாரும் அதிகமாக போதைப்பொருளுக்கு அடிமையாகிக் கொண்டிருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

இளையோர் மத்தியில் போதைப் பொருள் பாவனையால் தமிழர் தாயகம் கடுமையாக சிதைவடைந்து வரும் நிலையில் இதுவரை 2000 க்கும் அதிகமானோர் யாழ்ப்பாணத்தில் இயங்கும் மாற்றம் அறக்கட்டளை நிறுவனத்தினரால் மீட்கப்பட்டுள்ளனர். உரிய சிகிச்சையுடன் புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளனர். முழுமையாக மீண்டு சாதாரண குடும்ப வாழ்க்கைக்கு திரும்பியுள்ளனர். இவர்களில் பலர் படிப்பில் நல்ல திறமையானவர்களாகவும், தொழிலதிபர்களாகவும் இருந்து போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி தங்கள் வாழ்வின் ஒரு பகுதியை தவற விட்டுள்ளனர்.

இலங்கையின் வடக்கு மாகாணத்தை சேர்ந்த 24 வயது இளைஞர் ஒருவர் கடந்த மூன்று வருடங்களாக போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி பல்கலைக்கழக படிப்பை இடைநடுவில் கைவிட்டு விட்டார். தான் சொந்தமாக தொடங்கிய தகவல் தொழிநுட்ப நிறுவனத்தையும் இழந்துவிட்டார். உற்றாரும் சுற்றத்தினரும் கைவிட்ட நிலையில் அவர் தொலைத்த வாழ்க்கையை மீட்க **835, நாவலர் வீதி, அரியாலை யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் அமைந்துள்ள மாற்றம் அறக்கட்டளை அமைப்பு பேருதவி செய்துள்ளது. ஒரு மாத கால சிகிச்சையுடன் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு தற்போது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் ஆரோக்கியமாக இருக்கும் அந்த இளைஞரை மாற்றம் அறக்கட்டளை நிறுவனத்தில் சந்தித்து பேசியிருந்தோம். அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு.

- கிரி -

**போதைப்பொருள்கள் பாவனையில் இருந்து முழுமையாக மீண்டவர் என்ற வகையில் சமூகத்துக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

இந்தப் போதைப்பொருள் பாவனை என்பது ஐந்தோ பத்தோ நிமிட தற்காலிக இன்பத்துக்காக எங்கள் முழு வாழ்க்கையையும் நாசமாக்கி விடும் முட்டாள்த்தனமான செயலாகும். நான் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போது தான் போதைப் பழக்கத்துக்கு அடிமையானேன். கொழும்பில் இருந்தபடியால் வெள்ளிக்கிழமை, சனிக்கிழமைகளில் அங்குள்ள முழு கிளப்களிலும் பார்ட்டியாக தான் இருக்கும். ஆரம்பத்தில் சிகரெட் குடியில் தொடங்கி கஞ்சா, ஹெரோயின், ஐஸ், கொக்கெய்ன், குளிசை என்று படிப்படியாக அடிமையாகிக் கொண்டே போனேன். ஆனால், கொஞ்ச நேரத்துக்கு தான் அந்த இன்பம் எல்லாமே. பின் அவை மூளையை மந்தமாக்கி பெரும் சோர்வு நிலைக்கு இட்டு சென்று விடும். பிறகு இரண்டு, மூன்று நாட்களுக்கு பெரும் விரக்தி நிலைக்கு ஆளாகும் நிலை ஏற்படும். அதிலிருந்து விடுபட திருப்பி பாவித்து திருப்பி பாவித்து எங்களுக்கு இருக்கின்ற எல்லாவற்றையும் இழக்கும் நிலை ஏற்படும். இந்த நிலையில் தான் மாற்றம் அறக்கட்டளையின் உதவியுடன் எனக்கு மாற்றம் ஏற்பட்டது. எல்லோரும் ஆறாம் அறிவில் இருந்து ஏழாம் அறிவுக்கு போகப் போகிறோம் என்று மனித பரிணாம வளர்ச்சியைப் போற்றிக் கொண்டிருக்கின்ற காலத்தில் இப்படி ஒரு அற்ப சுகத்துக்காக அதலபாதாளத்தில் விழுந்து எழ முடியாமல் எம் சமூகத்தில் ஏராளம் இளையோர்கள் இருக்கின்றனர்.

**இதிலிருந்து முற்று முழுதாக மீண்டு விட்டீர்களா?**

என்னுடைய சிகிச்சைக் காலம் இங்கே முடிந்து விட்டது. இருந்தாலும் நான் மன விருப்பத்துடன் இருக்கிறேன். இந்தப் பழக்கத்தால் எனது எதிர்காலத்தையே அழித்தனான். இங்கே வந்து போதைப் பொருளால் பாதிக்கப்பட்டவர்கள் முழுநாளும் அழுது கொண்டு, கத்திக் கொண்டு வேதனைப்படுவதை பார்க்கும் போது இந்த அழிவுக்குள் திரும்ப விழுந்து விடக் கூடாது என்கிற எண்ணம் அதிகரித்துள்ளது. எவ்வளவு சிரமப்பட்டு இந்த அறக்கட்டளையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இதனால் தான் நான் இப்பொழுது மீண்டு வந்து என்னுடைய சுயதொழிலை மேற்கொள்ள செல்லாமல் இங்கேயே தங்கியிருந்து அவர்களுடைய மறுவாழ்வுப் பணிகளுக்கு உதவிக்கரமாக இருந்து வருகிறேன்.

**எத்தனை வயதில் இருந்து எத்தனை வயது வரை போதைப் பொருளை பாவித் தீர்கள்? இதனால் இழந்தவை என்ன?**

18 வயதுக்குப் பிறகு நான் வீட்டு ஆட்களோட இல்லை. சுயமாக உழைத்தேன். எதற்கும் வீட்டிலிருந்து காசு வாங்க மாட்டேன். என்னுடைய வைராக்கியமாக நினைத்து 'நான் எதுவும் செய்யலாம் என்னுடைய காசில் தானே குடிக்கிறேன்' என்ற ஒரு பிழையான மனநிலையில் இருந்தேன். ஹொட்டல் ஒன்றில் வேலை செய்து கொண்டு காலையில் படிக்க ரியூசனுக்கு போனேன். மாலை குடித்துவிட்டு தான் வீடு செல்வேன்.

நான் உட்பட போதைப்பொருளுக்கு அடிமையான பலரின் வீடுகளில் குடும்பப் பிரச்சினை அதிகமாக இருக்கும். ஏதோ ஒரு வகையில் மன அழுத்தத் துக்கு உள்ளாகி பின் அதிலிருந்து மீள்வதற் காக சிற்றின்பத்தை தேடி தான் போதைப் பொருள் பாவனைக்குள் அவர்கள் சிக்குகின்றார்கள். அப்படி குறுக்குவழியில் போய் விழுந்த முட் டாள் தான் நான். 21 வயதில் கொழும்புக்கு போன பிறகு போதைப் பொருட்களின் கிடைப்பனவு அதி கமாக இருந்தது. நான் வேலை செய்த ஐ.டி துறை க்குள் முகாமையாளர், ஊழியர்களில் பெண்கள் கூட போதைப்பொருளுக்கு அடிமையாக இருந்தார்கள்.

என் குடும்ப சூழல் கொஞ்சம் மோசமாக ஆரம் பிக்க, படிப்பையும் இடையில் விட்டு, சொந்தமாக தொழில் தொடங்கி அதில் சிறிது நல்லா வர தொடங் கிய பின் போதைப்பாவனைக்குள் விழுந்து என் சுய நினைவை இழந்து என்னை சுற்றி என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை. பின் இங்கே வந்து தெளிந்து வந்த பின்னர் தான் போதைப்பொருளால் இவ்வளவு இழப்புகளையும் சந்தித்த உண்மை தெரிய வந்தது. சிறிய வயதில் இருந்து படிப்பு தான் மேலே என எண்ணிக் கொண்டிருந்த நான் பட்டப் படிப்பையே இறுதியில் கைவிடும் நிலைக்கு வந்த போது நானா இப்படி செய்தேன் என இப்போது சிந்திக்கிறேன்.

**இங்கே சிகிச்சை பெற்றமை எப் படியான அனுபவமாக இருந்தது?**

என்னை வற்புறுத்தியே இங்கே கூட்டி வந்தார்கள். வந்து முதல் மூன்று நாளும் என்னபாடு பட்டாவது இந்த இடத்தை விட்டு தப்பியோட வேண்டும் என நினைத்திருந்தேன். இப்போது நான் முழுமையாக மீண்டு இன்னும் பலரை மீட்கும் பணியில் சிறிது காலம் இங்கே உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு இருக்கிறேன். மூச்சுப் பயிற்சி, தியானம் எல்லாம் முதலே தெரிந்திருந்தால் மன அழுத்தத்துக்கு உள்ளா கும் போது போதைப்பொருள்களை பாவிக் காமல் இருந்திருப்பேன். தொழில் முயற்சிகள் தொடர் பிலும் அடிப்படைகளை நிறைய இங்கே சொல்லி தந்தார்கள். ஏற்கனவே நானும் சுய தொழில் முயற்சியை தொடங்கி பல விடயங்களை பிழையாக செய்து கொண்டிருந்தேன். இப்போது ஏற்கனவே செய்த தொழில் துறையை எப்படி நேர்த்தியான முறையில் செய்யலாம் என சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

**இப்போது போதைப்பொருள்களை பாவித்துக் கொண்டிருப்போருக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

போதைப்பொருள்களை பாவிப்பவர்களை திரும்ப திரும்ப பாவிக்கச் சொல்லி அவர்களின் உடல் தூண்டும். வலியுடன் கூடிய அந்த தூண்டலின் போது போதைப் பொருளை வாங்க பணமில்லா விடின் களவெடுத்தாவது வாங்க தோன்றும். தான் அழு தழுது களவுக்கு போவதாக கந்தக்காட்டிலிருந்த தெரிந்த இளைஞர் ஒருவர் சொல்லுவார். அதிலிருந்து முழுமையாக விடுபட வேண்டுமென்றால் "வெளியி லிருந்த படியே போதைப்பொருள் பாவனையை விட்டு விடுவேன், கொஞ்சம் கொஞ்சமாக குறைப்பேன்" என்று சொல்லி உங்களை நீங்களே ஏமாற்றுவதை விட மாற்றம் அறக்கட்டளைக்கு வந்து கொஞ்சக் காலம் இருந்து பாருங்கள். மாற்றம் அறக்கட்டளை மட்டுமல்ல, அரசாங்கத்தால் இயக்கப்படும் புனர்வாழ்வு இல்லமான அனுராதபுரத்தில் உள்ள கந்தக்காடு மற்றும் பல்வேறு மாவட்டங்களிலும் போதைப்பொருள் புனர்வாழ்வு இல்லங்களும் உள்ளன. அங்கே அணுகி தகுந்த சிகிச்சையின் ஊடாக முழுமையாக மீள முடியும். இங்கே வந்து நீங்கள் குணமாகி பின் போதைப் பொருள் பாவனையில் மீள முடியாதவர்களை இங்கே கூட்டி வந்து அவர்களை மீட்கும் பணியை நீங்கள் குறிப்பிட்ட காலமாவது செய்ய வேண்டும். நானும் இப்போது இந்தப் பணியையே செய்து வருகிறேன்.

போதைப் பொருளால் பாதிக்கப்பட்டுள்ள நிறைய பேருக்கு எப்படி அதிலிருந்து மீள்வது என்று தெரியாமல் உள்ளது. போதையால் பாதிக் கப்பட்டுள்ளவர்களின் உறவுகள் அவர்களை இங்கே கொண்டு வந்து குறிப்பிட்ட காலம் சிகிச்சைக்கு அனுமதித்து அவர்களை முழுமையாக மீட்க முடியும். அதற்கு முன்னுதாரணமாக நானே இருக்கிறேன்.

' கொஞ்ச நேரத்துக்கு தான் அந்த இன்பம் எல்லாமே. பின் அவை **மூளையை மந்தமாக்கி பெரும் சோர்வு நிலைக்கு** இட்டு சென்று விடும். பிறகு இரண்டு, மூன்று நாட்களுக்கு பெரும் **விரக்தி நிலைக்கு** ஆளாகும் நிலை ஏற்படும். '

தமிழ் ஊடகத்திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு,யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல்:nimirvueditor@gmail.com
இணையம்: www.nimirvu.org
தொலைபேசி: 021 223 2121

## ஆசிரியர் பார்வை

# உண்மையைக் கண்டறிவதன் முதற்படி சாட்சியங்களை பாதுகாத்தலே...

சர்வதேச அரசுகளின் நிலைமாறு கால நீதிக் கோட்பாட்டிற்கமைய இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த விடயத்தில் உண்மையைக் கண்டறிதல், நீதி வழங்குதல், இழப்பீடு வழங்குதல் மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் தொடர்ந்தும் தாமதமாகிக் கொண்டே போகின்றன. இன்னமும் சாட்சியங்களை திரட்டி அவற்றை பாதுகாக்காமல் மிகவும் சொற்ப இழப்பீடு வழங்கி காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை முடித்து விடப் பார்க்கிறது அரசு. 2009 இல் தமிழினப் படுகொலை அரங்கேறிய போது சாட்சியமற்ற போரை நிகழ்த்திய அரசு போர் வலயத்துக்குள் இருந்து மீண்ட மக்களிடம் சாட்சியங்களை பெற்று உரிய விசாரணைகளை மேற்கொள்ள பின்னடிக்கிறது. உண்மைகளை கண்டறிந்து நீதி வழங்காமல், அரைகுறை இழப்பீடுகளை வழங்கி கோப்புகளை இழுத்து மூடும் செயற்பாட்டை மேற்கொண்டு வருகிறது.

படையினரிடம் நேரடியாக மனைவிமாரால், தாய்மாரால் கையளிக்கப்பட்ட கணவன்மார், பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்கிற விடயம் தெளிவாக உண்மையை கண்டறிந்து வெளிப்படுத்தப்பட வேண்டும். போரால் கணவனை, தந்தையை இழந்த குடும்பம் ஒன்றுக்கு அவர் காணாமல் ஆக்கப்பட்ட திகதியில் இருந்து இன்று வரை எவ்வளவு பணத்தை உழைத்திருப்பாரோ அதன் குறிப்பிட்ட மடங்கு பணத்தொகையினை பணவீக்கத்துக்கு ஏற்ப பொருளாதார வல்லுநர்களால் சரியாக கணிப்பீடு செய்து வழங்கப்படல் வேண்டும். அப்படிப் பார்த்தால் ஒரு குடும்பத்துக்கே பல இலட்சம் ரூபாய்கள் வழங்க வேண்டி இருக்கும்.

உண்மையைக் கண்டறியும் பொறிமுறை தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் பேரவை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது. ஆனால், அதனை இலங்கை அரசு கிஞ்சித்தும் கேட்பதாக இல்லை. சர்வதேச நாடுகளும், சர்வதேச மனித உரிமைகள் சார் அமைப்புகளும் வலியுறுத்தியும் இப்போது வரை உண்மையைக் கண்டறிய எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை.

எமது தரப்பிலும் உள்ள அரசியற் கட்சிகள் சாட்சியங்களை ஆவணப்படுத்தவும் அவற்றை பாதுகாக்கவும் ஒழுங்கமைக்கப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நெருங்கிய உறவுகள் குறிப்பாக தாய், தந்தையர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் குறித்த 10 வருடங்களுக்குள் இறந்து விட்டனர். அங்கொன்றும் இங்கொன்றுமாக சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதே தவிர முறையாக பதிவு செய்யப்படவில்லை. யுத்தம் முடிந்த காலப் பகுதியில் சாட்சியங்களை ஆவணப்படுத்துவதில் அரச அச்சுறுத்தல் இருந்ததாக சொல்லப்பட்டது. ஆனால், அதனைத் தொடர்ந்து வந்த நல்லாட்சி காலத்தில் இந்த நடவடிக்கையை எடுக்க அரசுக்கு ஆதரவளித்து வந்த தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகளே முன்வரவில்லை. இந்த தவறு தமிழ் மக்களால் மறக்கப்பட மாட்டாது. அது வரலாற்றில் எழுதப்படும்.

சர்வதேச ரீதியில் உள்ள சட்டங்களுக்கு எதிராக மிகவும் மோசமான குற்றங்கள் தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சர்வதேச நியம விதிகளுக்கமைய ஆதாரபூர்வமாக ஆவணப்படுத்தப்பட்டு உலகின் முன் கொண்டு செல்லப்பட வேண்டியது அவசியமாகும். உண்மையைக் கண்டறிவதன் முதற்படி சாட்சியங்களை திரட்டிப் பாதுகாத்தலே ஆகும். இன்று உலகு இலங்கையில் நடப்பதை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறது. அரச அச்சுறுத்தல் என்று இன்னமும் சாட்டுக்கள் சொல்லிக் கொண்டிருப்பதை விடுத்து இந்தச் சந்தர்ப்பத்தில் கிடைத்துள்ள இடைவெளியை பயன்படுத்தி எஞ்சியுள்ள சாட்சியங்களையாவது திரட்டி ஆவணப்படுத்தி பாதுகாக்க தமிழ் அரசியற் கட்சிகள் முன் வர வேண்டும்.

- செ.கிரிசாந்-

# இனப்படுகொலையின் மறுபக்கமே இன்றைய சிங்கள அரசியற் கொதிநிலை இதில் தமிழரின் நிலையென்ன, அடுத்ததென்ன?

ஈழத்தமிழ் அரசியல் வரலாற்றறிஞர் மு.திருநாவுக்கரசு அவர்களால் 10.04.2022 அன்று நடாத்தப்பட்ட "இனப்படுகொலையின் மறு பக்கமே இன்றைய சிங்கள அரசியற் கொதிநிலை இதில் தமிழரின் நிலையென்ன, அடுத்ததென்ன?" என்கிற உரையாடல் வகுப்பின் இறுதிப் பகுதி இங்கே பிரசுரமாகிறது.

இப்போது பலரும் பலவாறு சொல் கின்றார்கள். இடைக்கால அரசாங்கம், தற்காலிக அரசாங்கம் அல்லது ஒரு செயற்பாட்டுக் குழு போட்டு பொருளாதார பிரச்சனைக்கான உடனடித் தீர்வு என்று பேசுகிறார்கள். தமிழ்த் தலைவர்கள் எல்லோருமே கதியற்றவர் களாக கையாலாகாதவர்களாய் மௌனிக ளாய் இருக்கின்றார்கள். எந்தவிதமான விழிப்பு மற்று அண்டை நாடு, சர்வதேச அரசியல், ஈழத் தமிழர் அரசியல், சிங்களவர் அரசியல் இவற்றை இணைத்துப் பார்க்க எதுவுமே தெரியாதவர்களாக இருக்கின்றார்கள். அவர் களுக்கு தெரிந்திருந்தால் இதுவரை சொல்லி யிருப்பார்களே. எதனையும் அவர்கள் சொல்லவில்லை. இலங்கையின் இடைக்ால அரசு அமைக்கப்படுவ தைப் பற்றி எல்லோரிடமும் கற்பனைகளுண்டு. ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்பி விடலாம் என் கின்ற குரல்கள் பெரிதாய் எழுந்திருக்கின்றன. இதில் இலங்கையின் அரசியல் கலாசாரத்தை பற்றி மறுபடியும் சொல்லலாம்.

இந்து வேதாந்தத்தில் துவை தம், அத்வைதம் என்ற இரண்டு சொற்பிரயோ கங்கள் உண்டு. துவைதம் என்றால் இரண்டு. அத்வை தம் இரண்டு அல்ல. ஜீவாத்மாவும் பரமாத்வாவும் இரண்டு என சொல்கிறது துவைதம். ஜீவாத்மாவும் பரமாத்வாவும் இரண்டு அல்ல என்கிறது அத்வைதம். இது தான் இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமைக்கு பொருத்தமான சிறப்பான எடுகோள் ஆகும். இலங்கை அரசில் ஒரு ஜனாதிபதி இருப்பார் அவருக்கு கீழ் ஒரு இடைக் கால அரசாங்கம். இதனைப் பார்த்தால் இரண்டு போன்று இருக்கும். ஆனால் ஜனாதிபதி அதிக அதிகாரம் உடையவர் என்ப தால் இரண்டு அல்ல ஒன்று தான். ஜனாதிபதியின் அதிகாரம் கலைக்கப்படாதவிடத்து இங்கு ஏற்படுத் தப்படும் எந்த அரசாங்கமும் கோத்தாபயவினு டையதும் ராஜபக்சக்களினுடையதும் மட்டுமே தான். யாராவது ராஜபக்சக்களினை காப்பாற்றும் ஒரு இடைக்கால அரசாங்கத்தை நிறுவி அவர்களை காப்பாற்றி விட்டு வெளியே வரலாம். அவ்வளவு தான் நடக்கும். இடைக்கால அரசாங்கம் என்று சொல்லி வெளிநாடுகளில் கடன் பெறக்கூடிய சக்திகள் அரசில் பங்கெடுத்து ராஜபக்சகளை காப்பாற்றி விட்டு வெளியே வருவதற்கான ஒரு வாய் க்காலைத்தான் ராஜபக்சகளும் விரும்புகின்றார்கள்.



சஜித் பிரேமதாஸ கேட்டுக் கொண்டது, 20 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி விட்டு 19 ஆவது திருத்தச் சட்ட த்தின் கீழ் அதிகாரமற்ற ஜனாதிபதி வேண்டுமென்று. அப்படி இருந்தால், தான் பிரதமர் பதவியை பொறு ப்பேற்று இடைக்கால அரசாங்கத்தை அமைக்கத் தயாரென்று கூறினார். ஆனால் அரசியல் யாப்பு குழு தலைவர் ரொமேஸ் டி சில்வா மற்றும் மனோகரா டி சில்வா ஆகிய இரண்டு சட்டத்தரணிகளும் சேர்ந்து ஜனாதிபதிக்கு ஆலோசனையாக ஒரு திட்ட வரைபொன்றை வழங்கி இருக்கின்றனர். அதில் இன் றைய 44ஆவது சரத்தின் கீழ் 44A என்கின்ற ஒரு உப பகுதியை அதனோடு புகுத்தி விடுமாறு சொன்னார்கள்.

இங்கு சஜித் கேட்டது 20 ஆவதை நீக்கு என்பதாகும். ஆனால், இந்த 44A என்ன செய்கின்ற தென்றால் மந்திரி சபையையும் பிரதம ரையும் பதவியில் இருந்து உடனடியாக கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குகிறது. அதன் கீழ் 15 பேரைக் கொண்ட ஒரு மந்திரிசபையை நியமித்து அதற்கு நாடாளும ன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவரை பிரதமராக நியமிக்க ஜனாதிபதிக்கு அதிகாரத்தை வழங்குகிறது. பிரதமரை விட மற்றவர்கள் நடாளுமன்ற உறு ப்பினர்களாக இருக்க வேண்டியதில்லை. எந்த கட்சியை சேர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டி யதில்லை. நிபுணர்களாக இருக்க வேண்டும். இதனை நாடாளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும். இச்சபை ஒரு வருடத்திற்கு பதவியில் இருக்கும். விரும்பி னால் மீண்டும் இரண்டாவது தடவை நீடிக்கலாம்.

இது தான் அவர்களுடைய பிரதானமான முன்வரைபு. இதன் கீழ் இடைக்கால அரசாங்கம் ஒன்றை உருவாக்கி ஜனாதிபதியின் கீழ் ஒரு அரசாங்கத்தை நடத்துவது என்றும் எதிர்கட்சி தலைவரும் ஜனாதிபதியும் கூடி ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் எனவும் அவர்கள் முன்வைக்கின்றனர். இதனை பார்த்தால் புதியது போல தோன்றும். இது அமெரிக்க அரசியல் யாப்பிலுள்ள ஜனாதிபதியின் அதிகாரத்தை அப்படியே பிரதிபலிக்கின்றது. அமெரிக்க அரசியல் யாப்பில் ஜனாதிபதி பிரதிநிதி சபையின் உறுப்பினராகவோ செனட் சபையின் உறுப்பினராகவோ இருக்க வேண்டும் என்று இல்லை. அவர் தனக்குரிய அமைச்சர்களை நியமிப்பார். அது செனட் இனுடைய அனுமதியை பெற்றால் சரி. அது பிரசித்தமான தாக நிபுணர்களை கொண்டதாக இருக்க வேண்டும்.

இந்த அமெரிக்க யாப்பில் காணப்படும் இந்த அம்சங்களை தான் அதாவது அரசாங்கம் அமைப்பதற்கு கோத்தாபயவிற்கு அதிகாரத்தை வழங்குவது தான் அவர்கள் புகுத்த நினைக்கும் 44A இனுடைய விளக்கம். இந்த முன்வரைபில் சஜித் பிரேமதாஸ கேட்டதற்கு எதிராகத் தான் சொல்லப்பட்டுள்ளது. என்ன எப்படியோ அத்வைதமே இறுதி முடிவு. துவைதம் அல்ல. இடைக்கால அரசாங்கம் என்ற ஒன்று ஜனாதிபதியிலிருந்து பிரிந்தது அல்ல. இந்த அத்வைதத்தை நீங்கள் இலங்கையினுடைய முழு அரசியலிலும் பார்க்கலாம். தமிழ் மக்களை ஒழிப்பதற்கு ஏதுவாகவே ஜனாதிபதி முறைமை இலங்கையில் ஜே.ஆர்.ஜெயவர்தனாவால் நடைமுறையில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதி முறைமை இல்லையேல் முள்ளிவாய்க்கால் படுகொலையை தாங்கள் இலகுவில் வென்றிருக்க முடியாதென்று சிங்கள தலைவர்கள், புத்திஜீவிகளும் அதனை செய்தவர்களும் வெளிப்படையாக சொல்லி இருக்கின்றார்கள். ஜனாதிபதி முறைமை என்பது அனைத்து வகை சர்வாதிகாரத்திற்கும் அடிப்படையாக இருக்கின்றது. வளர்ச்சிகள் கிடையாத இலங்கை போன்ற ஜனநாயக நாட்டில் எல்லாமே தலைகீழ். இலங்கையில் பெரும்பான்மையினரின் இனநாயகம் தான் இருக்கின்றது. இங்கு ஜனநாயகத்திற்கான அம்சம் கிடையாது. புள்ளடி போடும் ஒரு கலாசாரம் இருக்கின்றது. அதனூடாக வெற்றி பெற்றவர்கள் ஆட்சியமைக்கின்ற ஒரு பாரம்பரியம் இருக்கின்றது. நீதி, தர்மம் என்பவற்றுக்கு சிங்கள அரசியல் கலாசாரத்தில் இடமே கிடையாது. ஆதலினால் இத்தகைய சிங்கள அரசியல் கலாசாரத்தில் நாம் நீதியை பற்றி சிந்திக்க முடியாது.

தமிழ் மக்கள் தங்களுக்கான நீதியை பெறும் விடயத்தில் மிகவும் கட்டுக்கோப்புடன் யோசிக்க வேண்டும். இலங்கை 2500 வருட கால பிரசித்தமான அரசியல் வரலாற்றை கொண்ட ஒரு நாடு. உலகத்தில் 2300 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இறுக்கமான பாரம்பரியத்தை கொண்ட முதலாவது நாடு சீனா தான். அடுத்து ரஸ்யா ஒரு பிரசித்தமான பேரரசுக் கலாச்சாரத்தைக் கொண்ட நாடு. மன்னராட்சி, பலம் பொருந்திய இராணுவ கட்டமைப்பை கொண்ட நாடு. இவற்றுக்கடுத்து இலங்கை தான் இப்பண்புகளை கொண்டுள்ளது. சிங்களவர்களுக்கு 2500 வருட காலம் தொடர்ச்சியாக எழுதப்பட்ட வரலாறும் மன்னர் பாரம்பரியங்களுமுண்டு. இடைக்கிடை சில இடையூறுகள் இருந்தாலும் 2500 வருடகாலம் தொடர்ச்சியான தெளிவான அரசகட்டமைப்பு வளர்ச்சியை உடையது. சிங்களவர்களை பொறுத்தவரை அரசு என்பது மிகவும் வளர்ச்சியடைந்த ஒரு உறுதியான நிறுவனம்.

அரசாங்கம் (government) மற்றும் அரசு (state) இரண்டையும் பிரித்து பார்க்க வேண்டும். கோத்தாபய ஓர் அரசாங்கம். ஆனால் சிங்கள பௌத்தம் ஓர் அரசு. இந்த அரசு மிகவும் பலமானது. இதற்கு பலமான இராணுவம் 1979 இற்கு பின்பு கட்டியெழுப்பப்பட்டது. அது ஒரு குறுகியகால வரலாறைத் தான் கொண்டது. தமிழ் மக்களை கொலை செய்வதையும் மற்றும் எல்லாவிதமான ஏகபோக அக்கிரமங்களையும் சிங்கள மக்கள் அங்கீகரித்ததன் மூலம் அது ஒரு முனைப்பான வளர்ச்சியை அடைந்து விட்டது. வெளிநாடு ஒன்றுடன் யுத்தம் புரிந்ததை போல அப்பாவித் தமிழ் மக்களை கொன்று பெருவளர்ச்சியடைந்த இராணுவக் கட்டமைப்பை கொண்டுள்ளது.

அடுத்தது சிங்கள அதிகாரக் கட்டமைப்பு (bureaucracy) இந்த முழு ஆசியாவிலேயே பலம் வாய்ந்தது. ஜப்பானை இந்தியாவை மற்றும் சீனாவை விடவும் பலம் வாய்ந்தது. உலகத்திலேயே அதிகாரக் கட்டமைப்பை கட்டியாள்வதில் சீனா தான் பலம் வாய்ந்தது. அதனை அறிவார்ந்ததாக அறிமுகப்படுத்தியதும் அதுதான். அதாவது இந்த பரீட்சை முறையென்பதை சீனா தான் உலகுக்கு கொண்டு வந்தது. அங்கிருந்து தான் அது கிரேக்கத்திற்கு போய் ஐரோப்பாவிற்கு போய் திருப்பி எங்களுக்கு வந்தது. சீனர்கள் மத்தியில் சாதியமைப்பு கூட இல்லை. எனவே திறமைசாலிகள் ஆட்சிக்கு வருவதை விரும்பினார்கள். திறமைசாலிகளை தெரிவு செய்வதற்குரிய ஒரு முறை தான் பரீட்சை. அதிகாரக் கட்டமைப்பில் திறமைசாலிகளை நியமிப்பதற்கு அவர்களது குடும்பத்திற்குள்ளால் சாதிக்குள்ளால் ஆட்களை தெரிவு செய்வதற்கு இடமில்லாத போது திறமைக்குள்ளால் தெரிவு செய்ய முற்பட்ட போது தான்

அவர்கள் பரீட்சை என்கின்ற முறையை கொண்டு வந்தார்கள். அது தான் இன்று உலகம் முழுவதும் இருக்கின்றது. இதில் சிங்கள அதிகாரக் கட்டமைப்பு மிக தெளிவான திட்டவட்டமான வளர்ச்சியை அடைந்துள்ளது. பௌத்த மதத்தின் பின்னணியில் அவர்கள் சாதி வேறுபாடுகள் உண்டு. அதிலும் அரசியலில் 100% சாதி வேறுபாடுகள் உண்டு. அது தமிழர்களுக்கு தெரியாது. தீண்டாமை தான் சிங்கள மக்களிடம் இல்லை, ஆனால் சாதி வேறுபாடு இருக்கிறது. சிங்கள மக்களிடம் உள்ள அதிகாரக் கட்டமைப்பு மிகவும் உறுதியானது. மிகவும் திறமையானது. தமிழ் மக்களிடமும் அதிகாரக் கட்டமைப்பு இருக்கின்ற போதும் அது சிங்கள மக்களிடம் இருப்பதிலிருந்து பன்மடங்கு வேறுபடுகின்றது.

தமிழ் அதிகாரக்கட்டமைப்பு தீர்மானமெடுக்கும் ஒன்று அல்ல. அரசியல் தீர்மானத்தில் பங்காளிகள் அல்ல. தமிழ் அதிகாரக் கட்டமைப்பில் உள்ளவர்கள் சிங்கள அரசும் மந்திரிகளும் எடுக்கின்ற தீர்மானத்தை நிறைவேற்றுபவர்கள் மட்டுமே. தமிழர்கள் பல்வேறுப்பட்ட பெரிய அமைச்சு அதிகாரிகளாக இருந்தாலும் அவர்கள் ஒரு எழுத்து தீர்மானத்தை எடுக்க அனுமதிக்கபடாதவர்களேயாகும். சிங்கள ஆட்சியாளர்கள் வழங்குகின்ற கட்டளைகளை நிறைவேற்றுபவர்கள் மட்டுமே. எல்லாவற்றிற்கும் எஜமானிடம் அனுமதி கேட்டு நிற்பார்கள். எஜமான் சொல்வதையே செய்வார்கள். அந்த வகையில் சிங்கள அதிகாரக் கட்டமைப்பு தான் அதிகாரமுள்ள ஒன்றாக இருக்கிறது.

சிங்கள அரசில் முதலாவது பௌத்த மகாசங்கம் பலமான நிறுவனம். இராணுவமும் அதிகாரக் கட்டமைப்பும் பலமான நிறுவனங்கள். அதிகாரக் கட்டமைப்பு இரண்டு வகையாகப் பிரிக்கப்படலாம். ஒன்று, உள்நாட்டு நிர்வாக அதிகாரக் கட்டமைப்பு, இரண்டு, வெளிநாட்டு கொள்கையை நிர்ணயிக்கும் அதிகாரக் கட்டமைப்பு. வெளிநாடு சம்பந்தமான அதிகாரக் கட்டமைப்பில் சாதி முக்கிய பங்கு வகிக்கின்றது. தற்போது கோத்தாபயவிற்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்டவர்களும் சாதி அடிப்படையில் தான் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் அரசியலில் அதிகாரமற்றவர்கள். இந்த நிலையில் சிங்களவர்கள் மத்தியில் பலம் வாய்ந்த கட்டமைப்பு ரீதியான அரசு இருக்கின்றது. பௌத்த மகாசங்க கட்டமைப்பு இருக்கிறது. இவ்வாறு இருக்கின்ற நிறுவனங்கள் அரசினுடைய பலவீனங்களை மறைந்து போகப் பண்ணக்கூடியவை. எந்த அடி முட்டாளும் அரசாங்கத்தில் இருக்கலாம். நிறுவனம் அதை சரிப்படுத்தி எடுக்கும். பௌத்த மகாசங்கம் தீர்மானம் எடுக்கும். அதிகாரக் கட்டமைப்பு நிர்வாகம் செய்யக்கூடியதாய் இருக்கும். இராணுவம் செயற்பாட்டிற்கு உள்ள நிறுவனம். அரசாங்கம் துயில்கின்ற இடங்களில் எல்லாம் அதிர்ச்சியை உள்வாங்கி தன்னை தற்காத்து கொள்வதற்கு இந்த நிறுவனங்கள் செயற்படும். அரசு என்கின்ற பலம் வாய்ந்த கட்டமைப்பு அனைத்தையும் வார்த்து எடுக்கும். எனவே சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற இந்த கொந்தளிப்பு அந்த அரசுக்கு ஒரு பொருட்டில்லை. வரலாற்று கண் கொண்டு பார்த்தால் சில காலங்களின் பின்னர் இது தூர்ந்து போய்விடும். தமிழர்களின் பிரச்சினை அப்படியல்ல. ஆதலினால் நாம் கட்டமைப்பு ரீதியான பார்வைக்கு போக வேண்டும்.

ஈழத்தமிழர் பிரச்சினை உள்நாட்டு பரிமாணத்தால் மட்டும் நிர்ணயிக்கப்படக் கூடிய ஒன்று அல்ல. அண்டை நாடு, பிராந்திய அரசியல், உலகளாவிய அரசியல் என விரிந்து செல்கிறது. இதில் இன்றைய சூழலில் சிங்கள அரசு பலவீனமாக இருப்பது தான் தமிழ் மக்களுக்கு நல்லது என்ற வரலாற்று படிப்பினையை தமிழர்கள் மனதில் கொள்ள வேண்டும். வரலாற்று படிப்பினையின் அடிப்படையில் சிங்கள அரசை பலப்படுத்துவது எங்களை பலவீனப்படுத்துவதாகவும் எங்களை இழப்பதாகவும் முடியும் என்கின்ற விடயத்தையும் மனதில் கொள்ள வேண்டும். இந்த பலப்படுத்தல் வேலையை எந்த வெளிநாடும் செய்யக்கூடாது. சிங்களவர்களை பலப்படுத்துவது என்பது தமிழர்களை அழிப்பதாகும். தமிழ் மக்கள் 150,000 பேர் கொல்லப்பட்ட போது உள்நாட்டுப் பிரச்சினை என்று பார்த்து கொண்டும் சிங்கள அரசுக்கு ஆயுதங்களை வழங்கியும் மக்களை கொன்றொழித்து விட்டு தற்போது அரசை காப்பாற்றும் நோக்குடன் இருந்தால் இனப் படுகொலையின் இன்னுமொரு வடிவமாகத் தான் அதனைப் பார்க்க வேண்டும்.



எனவே எந்த ஒரு வெளிநாட்டையும் நோக்கி நாங்கள் கேட்க வேண்டியது, 'நீங்கள் வழங்கும் எந்த நிதியையும் நிபந்தனையின் கீழ் மட்டுமே வழங்க வேண்டும்' என்பதையே. இனப் பிரச்சினைக் கான தீர்வை அவர்கள் முன்வைப்பதாக சொன்னால், தமிழ் மக்களுக்கு சமஸ்டி அடிப்படையிலான தீர்வை முன்வைக்கின்ற போது நாம் ஆமோதிக்கலாம்.

உலக நாடுகள் அனைத்தும் தமிழர்களுக் கான உரிமையை வழங்கு என்று அரசை நிர்ப்ப ந்தித்து திட்டவட்டமான கோரிக்கையை முன்வை க்க வேண்டும். அப்படியில்லையேல் தமிழ் மக்களை அழித்ததை, இனியும் அழிக்கப்படுவதை அங்கீகரி ப்பது என்பதில் போய் முடியும். இதனைத் தான் தமிழ் மக்கள் அனைத்து நாடுகளையும் நோக்கி முன்வைக்க வேண்டும். களத்தில் உள்ள தமிழ் தலைவர்கள் ஒன்று சேர்ந்து அனைத்து நாடுகளையும் நோக்கி இந்தக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும். நிவாரணம் வழங்கினாலும் இனப்பிரச்சினைக்கு தீர்வு என்ற வகையில் வழங்கச் சொல்லி கேட்க வேண்டும்.

அடுத்து சர்வதேச ரீதியில் உக்ரைன் யுத்தம் உலக அரசியலில் ஒரு புதிய ஒழுங்கி னுடைய வாசல் கதவை தட்டுகின்றது. இதுவரை காலமும் ஒன்றரை இலட்சம் தமிழ் மக்கள் படு கொலை செய்யப்பட்டதை மௌனமாக பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்கா இப்போது சொல்கிறது ரஸ்யா மீது போர் குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று. இது எமக்கும் பொருந்தக்கூடியது தானே. இலங்கையிலும் தமிழ்மக்கள் கொல்லப்பட்டதை விசாரிக்க வேண்டும் என்று சர்வதேசத்தை அமெரிக்கா கோர வேண்டும். இன்று ஐ.நா சபை எடுத்திருக்கும் தீர்மானத்தின் படி ரஸ்யா மனிதஉரிமை ஆணையத் தில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த நடைமுறையை ஏன் ஈழத்தமிழர்களுக்கும் செய்யக் கூடாது. அப்படிப் பார்த்தால் உக்ரைன் ஈழத் தமிழர்களுக்கான வெளியொன்றை திறந்து விட்டுள்ளது.

புலத்தில் வாழும் தமிழர் தமிழ் மக்களு க்குரிய அரசியலை தீர்மானிக்க அரைவாசி பங்குடையவர்கள், களத்தில் வாழுபவர்கள் அரைவாசி பங்குடையவர்கள். புலம்பெயர் நாடுகளிலும் ஒரு செயற்குழுவை உருவாக்கி அதன்வழி சாத்வீக ரீதியாக தமிழ் மக்களுடைய அரசியல் கோரிக்கையை முன் வைக்கின்ற ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும். அகமும் புறமும் சேர்ந்து உருவாக்க வேண்டும். ஈழத்தமிழர்கள் கவனிக்க வேண்டிய பிரதான விடயங்களில் ஒன்று, வரலாற்று அனுபவம் என்ற ஒன்று எங்களிடம் இருக்கிறது. சிங்கள மக்க ளிடம் ஏற்பட்டிருக்கின்ற இந்த கொந்தளிப்பு எம்மிடம் முள்ளிவாய்க்காலிற்கு பின்பு ஏற்பட்டது. குறிப்பாக அது எழுக தமிழ் 1, எழுக தமிழ் 2 என்று மேலே வளர்ந்து வந்தது. எங்கள் தலைவர்களே எம்மை கைவிட்டு விட் டார்கள். ஆனால், இயல்பாகவே ஒரு மக்கள் போராட்டம் எழுந்தது. பின் எங்கள் தலைவர்களே அதனை சீரழித்தும் விட்டார்கள். அதன் பின், அனைத்து தமிழ் தலைவர்களும் போராட்டங்களை கைவிட்டு விட்டார்கள். அவ்வாறு கைவிட்டதும் அதன் பின் முன்னெடுக்காததும் வரலாற்று குற்றம். ஆனால் வரலாறு மீண்டும் வாய்ப்பை வழங்கியுள்ளது. ஒன்று பட்டு அனைவரும் நிற்க வேண்டும். ஒன்றுபட்டு போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அனை த்து தலைவர்களும் கடந்த கால தவறுகளில் இருந்து பாடங்களை கற்றுக் கொண்டு முன்னேற வேண்டும்.

அப்படிச் செய்யத் தவறும் தலைவர் களுக்கு புலம்பெயர் தமிழர்கள் நிதியுதவி வழங்கு வதை தவிர்க்க வேண்டும். உங்கள் நிதியுதவிகளில் தான் இவர்கள் தேரோட்டுகிறார்கள். நீங்கள் அங்கே சிரமப்பட்டு உழைத்து எம் மக்களுக்கும் உதவ வேண்டும் என்கிற மனதோடு இருக்கின்றீர்கள். புலம் பெயர் தமிழர்களின் நிதியை பயனுள்ளதாக்க ஈழத் தமிழர் நிதியம் என்ற ஒன்றை உருவாக்க வேண்டும். இந்த ஒரேயொரு நிதியம் போதும். அது ஜனநாயக பூர்வமாக பதிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். அதனூடாக ஈழ தமிழர்களுக்கு பல்வேறுபட்ட பொருளாதார விருத்தி, கல்வி என்பவற்றுக்கும் மற்றும் நெருக்கடிகள் வருகின்ற போதும் உதவி செய்ய லாம். உள்நாட்டு அரசியல் தலைவர்களும் காலம் காலமாக உழைத்த பணம் வைத்திருக்கிறார்கள். அதில் அவர்கள் தங்கள் அரசியலை செய்யட்டும்.

பணத்தை சரியான முறையில் மேற் பார்வை செய்யவும், நிர்வகிக்கவும், ஆய்வு செய்யவும் கூடியதாக இருக்க வேண்டும். இவ்வாறு நிதியம் ஒன்றை உருவாக்கினால் அனைத்து வெளிநாட்டு மக்களும் குறிப்பாக தமிழகத்தில் இருந்தும் நிதி வழங்க மக்கள் தயாராகவுள்ளனர். மேற்படி அனைத்து பின்னணியிலும் தமிழ் மக்கள் செயற்பட ஒரு காலம் வந்துள்ளது. அமைதியின்மையால் நாடு பிரிபட்டுப் போக வேண்டிய நிலை பிற்காலங்களில் ஏற்படு கின்ற போதும் தற்போதும் சில சாத்தியமான விட்டு கொடுப்புகளை செய்ய தயாராக இருக்க வேண்டும். நீங்கள் துண்டு துண்டாக நின்றாலும் ஓரிடத் தில் நின்று ஒன்றாக போராடும் களத்தினை உரு வாக்குங்கள். நாங்கள் போராட தயங்கினால் எங்களை நாங்களே கைவிட்டு விடுவோம். இந்தப் பின்ன ணியில் தமிழ் மக்கள் விரைவாக செயற்பட வேண்டிய காலம் வந்திருக்கிறது. இனி வரப்போகும் காலங்கள் வேகமாக விரிவடைந்து பின் தணிந்து போகலாம்.

அதற்கு தயாராக குறைந்தபட்ச சமஸ்டியை முன்வைத்திருக்கும் நாங்கள் அதனடிப்படையில் வேலை செய்ய வேண்டும். அது சிங்கள மக்களின் மனதினை வென்றெடுக்க உதவும். ஏனெனில் சமஸ்டி கோரிக்கையை 1956 ஆம் ஆண்டு வரை தமிழர்கள் முன்வைக்கவில்லை. 1956 ஆம் ஆண்டு வரையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முன்வைத்திருந்த ஒற்றையாட்சி கொள்கையை ஆதரித்து வாக்களித்த மக்கள் நாங்கள்.

1956 ஆம் ஆண்டு தான் தமிழரசுக் கட்சி அதாவது செல்வநாயகம் அவர்கள் முன்வைத்த சமஸ்டி கோரிக்கைக்கு ஆதரவளித்தோம். சமஸ்டி கோரிக்கையை 1949 ஆம் ஆண்டு செல்வநாயகம் முன்வைத்திருந்தாலும் 1956 ஆம் ஆண்டு தான் தமிழ் மக்களால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே ஒற்றையாட்சியின் கீழ் நாங்கள் தீர்வு காண சிங்களவர்களுடன் முற்பட்டோம் என்பதையும் அரசாங்கத்தில் 1948 ஆம் ஆண்டிலிருந்து பங்கெடுத்தவர்கள் என்பதையும் சிங்கள மக்களுக்கு புரிய வைக்க வேண்டும். ஒற்றையாட்சியின் கீழ் தமிழர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள், தமிழர்கள் சிங்கள அரசுடன் ஒத்துழைத்தார்கள். ஆனாலும் திரும்ப திரும்ப முரண்பட்டமையால தான் சமஸ்டி கோரிக்கை என்ற ஒன்று வந்தது. மீண்டும் மீண்டும் அதற்கு பின்னாலும் முதுகில் குத்தியதால் தான் தனிநாடு தமிழீழம் கோரிக்கை வந்தது. பின்பு, யுத்தத்தில் தோல்வியடைந்த பின்பு மீண்டும் சமஸ்டி கோரிக்கைக்கு அனைவரும் வந்திருக்கின்றோம். இதனடிப்படையில் தமிழ் மக்கள் போராடலாம்.

தமிழ் மக்களின் ஐக்கியம் மட்டுமே தமிழ் மக்களின் விடிவுக்கு வழி. தமிழ் மக்களின் ஐக்கியம் தமிழகத்தையும் சென்றடையட்டும். தமிழகம் இந்திய மத்திய அரசை வற்புறுத்தட்டும். சர்வதேசத்தை அனைத்து புலம்பெயர்ந்தவர்களும் உள்நாட்டவரும் வற்புறுத்த வேண்டும். வேகமாக அரசியல் மாறப்போகும் சூழலில் எங்களுக்குரிய பாத்திரத்தை வகித்து நாங்களும் இருக்கிறோம் என்று காட்ட வேண்டும். ஓய்ந்து ஒளிந்திருக்காமல் வரலாற்றின் பங்குதாரர்களாக இருக்க வேண்டும் என்பது இக்கட்டான காலக்கட்டத்தை கடப்பதற்காக அரசியல் சாராத அறிவியல் பூர்வமான மதிப்பீடே ஆகும்.



உரை: மு.திருநாவுக்கரசு

தொகுப்பு: கி.கார்த்திகா

# சிங்கள பெருந்தேசியவாதத்திடம் பறிபோகும் குருந்தூர் மலையும் பூர்வீக நிலமும்



- துருவன் -
(தொகுப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு பிரதேசத்தின் குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய 632 ஏக்கர் பூர்வீக காணிகளை அபகரிக்கும் முயற்சி தொல்லியல் திணைக்களத் தினரால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், குருந் தூர் மலையில் நீதிமன்ற கட்டளையைப் புறந்தள்ளி பௌத்த விகாரை ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றது. இவற்றை கண்டித்து தண்ணிமுறிப்பு மற்றும் குமுழ முனை பகுதி மக்களால் கடந்த 21.09.2022 அன்று குருந்தூர் மலையில் பாரிய ஆர்ப்பா ட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்தோடு, அங்கு மீண்டும் பௌத்த விகாரை கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமை தொடர்பில் ஆர்ப்பா ட்டக்காரர்களால் தொல்லியல் திணைக்கள உத்தி யோகத்தர்களிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதன் போது அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. இந் நிலையில் அங்கு ஆயுதங்கள் தாங்கிய பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகள் பொல்லுகளுடன் குவிக்க ப்பட்டதுடன், ஆர்ப்பாட்டக்காரர்களை அச்சுறுத்து கின்ற வகையில் பொலிஸார் புகைப்படங்களையும் எடுத் திருந்தனர். பொலிஸாரின் இத்தகைய நடடிக்கையைக் கண்டித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், குருந்தூர் மலையில் கட்டுமானப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படக் கூடாது என்ற நீதிமன்றக் கட்டளையினை நடைமு றைப்படுத்துமாறும் காவல்துறையினரிடம் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா கடந்த 19.06.2022 அன்று குருந் தூர் மலைக்கு விஜயம் செய்து, இதற்கு மேல் கட்டுமானப் பணிகள் எதனையும் மேற்கொள்ளக் கூடாது எனக் கட்டளை பிறப்பித்திருந்தார். இருப் பினும் தற்போதும் அங்கு நீதிமன்றத்தின் கட்ட ளையை மீறி பௌத்த கட்டுமானப் பணிகள் ஒரு பௌத்த துறவி மற்றும் இராணுவத்தினரால் தொடர்ச் சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் குருந்தூர் மலையில் உள்ள "குருந்தாவசோக" ரஜமாஹா விகாரையின் விகாராதிபதியாக கல்கமுவே சந்தபோதி தேரர் செயற்பட்டு வருகிறார். குருந்தூர் மலையின் உச் சியில் அமைந்துள்ள ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் காலங்காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த பொங்கல் உள்ளிட்ட பூர்வீக வழிபாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. அங்கிருந்த சூலம் பிடுங்கி எறியப்பட்டுள்ளது.

குருந்தூர் மலை தொடர்பிலான AR673/18 என்ற வழக்கு, குருந்தூர்மலை ஆதி சிவன் ஐயனார் ஆலயத்தைச் சார்ந்த மக்களால் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிலே சமர்ப் பணம் செய்யப்பட்டது. இந்த வழக்கில் ஏற்கனவே 13.09.2018 அன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற த்தால், மிகத் தெளிவான கட்டளை ஒன்று வழங்க ப்பட்டிருந்தது. அதிலே, குருந்தூர் மலைப் பிரதேசம் தொல்லியல் திணைக்களத்தின் கீழ் வருகின்ற பிரதேசம் எனவும், அப்பிரதேசத்திலே புதிதாக எவ்விதமான கட்டடங்களையும் அமைக்க முடியாது எனவும் மேலும் பரம்பரையாக வழிபாடு செய் கின்ற சைவர்கள் அங்கு வழிபாடுகளை மேற் கொள்ள முடியும் எனவும், அதனை யாராலும் தடுக்க முடியாது எனவும், அத்தோடு ஏனைய புதிய கட்டுமானங்களை செய்யும் முயற்சி களில் ஈடுபடுபவர்களை கைது செய்யலாம் எனவும் கட்டளை வழங்கப்பட்டிருந்தது. அந்தக் கட்டளை யினை மீறியே தற்போது அங்கு புதிதாக ஒரு விகாரை அமைக்கப்பட்டு, அந்த விகாரையில் 12.06.2022 அன்று, விசேட பூசை வழிபாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பிரச்சி னைகளை அடுத்து முழுக் குருந்தூர் மலையும் தொல்பொருளியல் ஆய்வுப் பகுதியாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. தொல்பொருள் பகுதியாக பிரகடனப்படுத்தியதனால் அங்கு வழிபாடு செய்ய செல்லும் தமிழ் மக்களின் எண்ணிக்கை கட்டுப் படுத்தப்பட்டதோடு அப்பகுதியில் இராணுவத் தினரின் பிரசன்னமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. பின்பு குறித்த பகுதியில் பௌத்த தொல் பொருள் சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக கூறப்பட்டது.

2018 இல் தேரர் ஒருவர் வருகை தந்து இராணுவத்தினரின் உதவியுடன் புத்தர் சிலை ஒன்றினை நிறுவ முற்பட்டதால் தான் முதன் முதலாக கடுமையான சர்ச்சை வெடித்தது.

தொன்று தொட்டு வழிபாட்டில் ஈடுபடும் கிராம மக்கள் இயற்கை முறையில் அமைந்த கிராமிய வழிபாட்டினை ஆலயத்தில் மேற்கொள்ள எந்தவித தடையும் இல்லை என்று 13.09.2018 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் அறிவித்தது. மேலும் தொல்பொருள் அகழ்வுகளை மேற்கொள்வதாக இருந்தால், யாழ்.பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறையையும் மூத்த வரலாற்று ஆய்வாளர்களையும் குறித்த கிராமத்தினை சேர்ந்த அனுபவம் வாய்ந்தவர்களையும் ஈடுபடுத்த வேண்டுமென்றும் உத்தர விடப்பட்டது. குறித்த பகுதியில்,தொல்பொருள் ஆய்வு என்ற போர்வையில் புதிதாக எந்தவொரு மதத்தினையும் சேர்ந்த ஆலயங்கள் அமைப்பதும் கட்டுமானங்களை மேற்கொள்வதும் செய்யப்பட முடியாது என்றும் முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

கடந்த ஆண்டு கிராமமக்களின் பங்கேற்பின்றி படையினரின் முழுமையான ஒத்துழைப்புக்களுடன் தொல்பொருள் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் போது, மீட்கப்பட்ட தொல்பொருள் சிதைவுகள், அநுராதபுர காலத்திற்குரியவை என்று தொல்பொருளியல் திணைக்களத்தின் அப்போதைய பணிப்பாளர் நாயகம், பேராசிரியர் அநுர மனதுங்க கூறி இருந்தார். எனினும், அங்கு தொல்பொருள் சின்னமாக கிடைக்கப்பெற்றது 8 அடுக்குகள் கொண்ட அஸ்ட லிங்கம் எனப்படும் தாராலிங்கம் என்று வரலாற்று ஆய்வாளர் என்.கே.எஸ்.திருச்செல்வம் குறிப்பிட்டதோடு தமிழக ஆய்வாளர்கள் ஊடாக அதனை உறுதிப்படுத்தியதாகவும் கூறி இருந்தார்.

தொல்பொருள் அடையாளங்களை பாதுகாப்பதற்காக நிறுவப்பட்ட அரசாங்கக் கட்டமைப்பான தொல்பொருள் திணைக்களம் குறித்த இடங்களை தொல்பொருள் பகுதியாக பிரகடனம் செய்து அங்கு நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்கு எவ்விதமான அதிகாரங்களையும் கொண்டிருக்கவில்லை. இவ்வாறு எந்த அடிப்படை சட்ட ரீதியான ஏற்பாடுகளையும் கொண்டிராத தொல்பொருள் திணைக்களம் அங்கு அகழ்வுகளும், ஆய்வுகளும் நிறைவடையாத பகுதியில் நிர்மாணங்களுக்கு இடமளித்தது என்பது சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஒரு கருவியாகவே தொல்பொருள் திணைக்களம் செயற்படுகிறது என்பதை தெளிவாக காட்டுகிறது. ஒதியமலைக் கிராமத்தில் 1984 ஆம் ஆண்டு மார்கழியில் நிகழ்த்தப்பட்ட மோசமான படுகொலைகளின் பின்னர் பழைய தண்ணிமுறிப்பு குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் அங்கிருந்து வேறு கிராமங்களுக்கு இடம்பெயர்ந்தனர். அன்று இடம்பெயர்ந்தவர்களில் 23 குடும்பங்களுக்குச் சொந்தமான நிலங்களும், 48 ஏக்கர்கள் வரையிலான புலங்களும் தற்போதும் உறுதிகளுடன் காணப்படுகின்றன. தண்ணிமுறிப்பு அ.த.க.பாடசாலை, தபாலகம், நெற் களஞ்சியசாலை உள்ளிட்டவற்றின் எச்சங்கள் ஏற்கனவே தமிழ் மக்கள் இங்கே வாழ்ந்தமையை உறுதிப்படுத்துகின்றன.

குருந்தூர் மலை மற்றும் வயல் காணிகள் அபகரிப்பு தொடர்பில் குமுழமுனை கிராம அபிவிருத்தி சங்க தலைவர் இ.மயூரன் கருத்து தெரிவிக்கையில், ஒரு காவி உடை தரித்த தேரரால் மாவட்ட நீதிமன்ற கட்டளையினை புறம் தள்ளி தொடர்ச்சியாக இராணுவத்தினை வைத்து கட்டுமானங்களை மேற்கொள்ள முடியும் என்றால் இலங்கையில் நீதி எங்கே இருக்கின்றது? நீதியை யார் யாரிடம் கேட்பது? சர்வதேச ரீதியில் பணம் பெறுவதற்காக பச்சைப் பொய்களை சொல்லி திரிகின்றார்கள். அதனை சர்வதேச நாடுகளும் வேடிக்கை பார்க்கின்றன. காலத்திற்கு காலம் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் எம்மை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் மாறுவார்கள். பல உத்தரவாதங்களை தருவார்கள். இறுதியில் நடப்பது நில ஆக்கிரமிப்பும், பௌத்த மத ஆக்கிரமிப்பும் தான்.

**தொல்பொருள் அடையாளங்களை பாதுகாப்பதற்காக நிறுவப்பட்ட அரசாங்கக் கட்டமைப்பான தொல் பொருள் திணைக்களம் குறித்த இடங்களை தொல் பொருள் பகுதியாக பிரகடனம் செய்து அங்கு நிர்மாணப் பணிகளை முன்னெடுப் பதற்கு எவ்விதமான அதிகாரங்களையும் கொண்டிருக்கவில்லை.**

சிங்கள ஆட்சியாளர்கள் தங்களது நாட்டைக் கூட கொண்டு நடாத்த முடியாத நிலையில் இங்கு விகாரை அமைப்பதும் சிங்கள மக்களை ஏமாற்றுவதும் அவர்களை பேருந்துக்களில் அழைத்து வந்து தெருத் தெருவாக இறக்கி விடுவதும் எமது நாட்டின் துயர் தோய்ந்த அரசியலாக மாறியுள்ளது. எமது தமிழ் அரசியல்வாதிகள் என்று கூறிக்கொண்டு இருக்கின்ற அத்தனை பேரும் இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்துவதுடன் சர்வதேச ரீதியாக வெளிக்கொண்டு வருவதற்கான தார்மீகமான வேலைத் திட்டங்களை முறையாக மேற்கொள்ள வேண்டும். அம்பாறையில் பட்டிப்பளை ஆற்றில் தொடங்கி இன்று முல்லைத் தீவு மாவட்டம் தாண்டிய நிலையில் நிலப் பறிப்பின் உச்சத்தில் இருக்கின்றோம். முல்லைத் தீவில் குள ஆக்கிரமிப்பு நிறைவடைந்து விட்டது. வெகுவிரைவில் வடமராட்சியிலும் தென்மராட்சியிலும் வலிகாமத்திலும் இந்த நடவடிக்கைகள் தொடரும் நிலை வரும். அப்போதாவது தமிழ் தலைமைகள் விழித்தெழுகின்றனவா என்பதை சிறிதுகாலம் பொறுத்திருந்தால் பார்க்கலாம்.

தண்ணிமுறிப்பு கிராம அபிவிருத்தி சங்க தலைவரான கலைச்செல்வன் பின்வருமாறு தெரிவித்தார், 1984 ஆம் ஆண்டு தண்ணிமுறிப்பு பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் இதுவரைக்கும் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. இது தொடர்பில் பிரதேச செயலகத்திலும் மாவட்ட செயலத்திலும் கதைத்தோம். இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இன்று தொல்பொருள் திணைக்களம் எல்லைகளுக்கு கல்லுப் போடுவதற்கு காரணம் இவர்கள் தான். இடம்பெயர்ந்த மக்களை உரிய காலத்தில் மீள்குடியேற்றம் செய்திருக்க வேண்டும். மீள்குடியேற்றமும் செய்யவில்லை. மக்களுக்கான காணியினை வழங்குங்கள் என்று கோரியிருந்தோம், அதுவும் செய்து தரப்படவில்லை. குருந்தூர் மலைக்கு செல்லும் முதலாவது காணி எங்களின் காணி. இன்று எங்கள் காணியில் ஒரு தென்னம்பிள்ளை, கிணறு, பழைய கட்டிடங்கள் என்பன இருக்கின்றன. மக்கள் வாழ்கின்ற குடியிருப்பு இடமான தண்ணிமுறிப்பு 51 ஆம் கண்டம். இந்த இடத்திலும் தொல்பொருள் திணைக்களம் கல்லு நாட்டி காணியினை அபகரித்துள்ளார்கள். அதே போல் குருந்தூர் குளத்தினையும் முழுமையாக அபகரித்து குளத்தின் கீழ் உள்ள தனியார் வயல் காணிகளை அபகரித்து தொல்பொருள் திணைக்களம் கல்லு நாட்டியுள்ளார்கள். எல்லாப் பக்கங்களாலும் ஆக்கிரமித்தால் நாங்கள் என்ன செய்வது?

**தண்ணிமுறிப்பு கமக்கார அமைப்பு தலைவரான ச.சசிகுமார் கருத்து தெரிவிக்கையில்,** தண்ணிமுறிப்பு கிராமம் இப்படியே பாழடைந்து போய்க்கொண்டிருக்கின்றது. குளத்தினையும் வயல் நிலங்களையும் வாழ்வாதாரத்திற்கான மாடுகளின் மேய்ச்சல் தரவையினையும் சேர்த்து வைத்து தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்துள்ளது. குளத்தினையும் ஆக்கிரமிக்கும் நடவடிக்கையையும் செய்கின்றார்கள். தனியே குருந்தூர் மலை மட்டுமல்ல, 1953 ஆம் ஆண்டு கட்டப்பட்ட வாய்க்கால் கட்டு இதனையும் சேர்த்து நில ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். தமிழ் மக்களுக்கு சொந்தமான 632 ஏக்கர் காணி தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இவையெல்லாம் பறிபோகும் நிலையில் உள்ளன தமிழ் மக்கள் ஒன்றாக திரண்டு இதற்கெதிராக போராடாவிட்டால் எதுவுமே எஞ்சாது என்றார்.

கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டாலும் சிங்கள இனவாத அரசாங்கம் தமிழர் பகுதிகளில் ஆக்கிரமிப்புகளையும், நிலப் பறிப்புகளையும் கைவிடவில்லை என்பதற்கு சமீபத்தைய சான்று குருந்தூர் மலை.



# ஆபத்தான விளிம்பில் நிற்கும் தென்னமரபடி

- ஹயன் -

திருக்கோணமலை மாவட்டத்தின் தொன்மையான கிராமங்களில் ஒன்று தென்னவன் மரபு அடி கிராமம். பாண்டியனின் மரபில் வந்தவர்கள் வாழ்ந்த இடம் என்பதால் இந்த ஊருக்கு தென்னன் மரபு அடி என்ற காரணப் பெயர் வந்தது என்கின்றனர் முதியோர். தென்னன் மரபு அடி என்ற சொற்கள் சேர்த்து தென்ன மரபடி என்று ஆகி, பிற்பாடு 'தென்னமரவடி' எனத் திரிந்து இன்று அவ்வாறே அழைக்கப்பட்டு வருகின்றது.

இது நீண்ட வடிவத்தில் அமைந்துள்ள திருக்கோணமலை மாவட்டத்தின் வடக்கு உச்சியில், முல்லைத்தீவு - திருக்கோணமலை மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ள எல்லைக் கிராமமாகும். திருக்கோணமலை நகரத்திலிருந்து புல்மோட்டை ஊடாக சுமார் 60 கிலோ மீட்டர் தூரத்தில் இந்த கிராமம் அமைந்துள்ளது. தமிழ் தேசிய ரீதியாக பார்க்கும் பொழுது தமிழர்களின் பூர்வீக நிலப் பகுதியாகிய வடக்கு கிழக்கின் இணைப்பு புள்ளியாக இந்த கிராமம் காணப்படுகின்றது. இதனால் நீண்ட காலம் தொட்டு அரச பேரினவாதிகளால் பல்வேறுபட்ட சவால்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

அரச கட்டமைப்பு அடிப்படையில் நோக்கும் பொழுது, திருக்கோணமலை மாவட்ட செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் இந்த கிராமம் அமைந்துள்ளது. தென்னவன் மரபு அடி கிராமம் தனியான கிராம சேவகர் பிரிவாக காணப்படுகின்றது. குறித்த கிராமத்தில் தரம் ஐந்து வரை கல்வி கற்க கூடிய பாடசாலை காணப்படுவதுடன், குடிநீர் வசதிகள், மின்சாரம் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

போக்குவரத்தை பொறுத்தவரை தென்னவன் மரபு அடி கிராமத்திற்கென விசேட பேருந்துகள் காணப்படாத போதிலும், முல்லைத்தீவு பேருந்து மூலம் குறித்த கிராமத்தை அடைய முடிகின்றது. புவியியல் ரீதியான பார்வையில் திருகோணமலை இயற்கை துறைமுகத்தை போன்றதொரு அமைப்பை கொண்ட பகுதியாக இது காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக கந்தசாமி மலை அமைந்துள்ள பகுதி கடலுக்குள் நீண்டு, மூன்று பக்கங்களிலும் நீரால் சூழப்பட்ட பகுதியாக காணப்படுகின்றது. அத்துடன் புல்மோட்டை - கொக்கிளாய் தொடு பகுதிகள் உள்ள குடா பகுதிகளின் வாயில் கதவுகளாக தென்னவன் மரபு அடி காத்து நிற்கின்றது. குறித்த பகுதியில் மீன் பிடிதுறைமுகம் ஒன்றும் யுத்தத்துக்கு பின்னர் நிறுவப்பட்டுள்ளது. எனினும் குறித்த துறைமுகத்தை தமிழ் மக்கள் பாரிய அளவில் பயன்படுத்துவது இல்லை என்பது கண்கூடாக தெரிகிறது, அருகில் உள்ள சிங்கள கிராமத்து மக்கள் தான் குறித்த துறைமுகத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மூன்றாம் தேதி இடம்பெற்ற படுகொலை உட்பட இக் கிராமத்தை சூழ உள்ள பகுதிகளில் 3 தடவைகள் பாரிய அளவில் படுகொலைகளும், இடப்பெயர்வுகளும் இடம் பெற்றுள்ளன. இதன் காரணமாக குறித்த கிராமத்தில் இருந்த மக்கள் திருகோணமலையின் நகரப்பகுதி, தம்பலகாமம், வடக்கின் விஸ்வமடு போன்ற பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து குடியேறி உள்ளனர். தொடர்ச்சியான படுகொலைகளுக்கு உட்பட்டமையினால் குறித்த மக்கள் மீள்குடியேற்றத்தின் பின்னரும் கூட கிராமத்துக்கு திரும்பி வருவதை தவிர்த்து வருகின்றனர். எனினும் சுமார் 80 தொடக்கம் 100 குடும்பங்கள் பெரும்பாலும் வயதானவர்கள் அடங்கலாக தென்னவன் மரபு அடி கிராமத்தில் வசித்து வருகின்றனர்.




## தென்னமரபடி இரு மாகாண ரீதியான அமைப்பு

**இந்நிலையில் தற்சமயம் தென்னவன் மரபு அடி கிராமத்தை கிழக்கு மாகாணத்தில் இருந்து பிரித்து பதவிஸ்ரீபுர எனப்படும் திருகோணமலையின் ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் இணைத்து அதனை அனுராதபுரம் மாவட்டத்துடன் இணைப்பதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.** இதன் மூலம் வடக்குக்கிழக்கு நிலத் தொடர்பு துண்டிக்கப்படுவதுடன், தமிழர்களின் பூர்வீக நிலப்பகுதியின் நிலத்தொடர்ச்சி என்பது கேள்விக்கு உட்படுத்தப்படும். மற்றும் இந்த அரசின் செயற்பாட்டுக்கு எதிராக பலர் தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டு, இதனை எதிர்த்து வருகின்றனர்.

தற்சமயம் குறித்த செயற்பாடு தொடர்பில் எவ்வித வெளிப்பாடான செயற்பாடுகளும் இன்றி கிடப்பில் போடப்பட்டுள்ளதாக வெளிக் காட்டப்படுகின்றது. எனினும் இந்த செயற்பாடு மேற்கொள்ளப்படும் பட்சத்தில் தமிழர் தேசத்தின் நிலத் தொடர்ச்சியை பாதிக்கும் என்பதில் மாற்று கருத்து இல்லை.

**வடக்கு கிழக்கு இணைப்பை தொடர்ச்சியாக பேணுவதற்கு இந்த கிராமத்தைக் காப்பாற்ற வேண்டியது அவசியமான செயற்பாடாகும்.**



மீள் குடியேற்றத்தின் போது குறித்த கிராம மக்களின் பல வயல் நிலங்கள் அயல் சிங்கள கிராம மக்களாலும், புல்மோட்டை இஸ்லாமியர்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டன. இதனால் குறித்த பகுதியில் காணப்பட்ட பலநூறு ஏக்கர் விவசாய நிலம் தமிழர்களின் கையில் இருந்து மாற்று இனத்தவரின் கட்டுப்பாட்டில் உள்ளது. அத்துடன் குறித்த கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் கிராமத்திற்கு திரும்பி வராமையினால் கிராமத்தில் இளம் தொழில் முனைவர்கள் குன்றி காணப்படுவது பெரும் குறைபாடாக உள்ளது.

வடக்கு கிழக்கு இணைப்பை தொடர்ச்சியாக பேணுவதற்கு இந்த கிராமத்தைக் காப்பாற்ற வேண்டியது அவசியமான செயற்பாடாகும். இதன் அடிப்படையில் திருக்கோணமலை மற்றும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த நிலத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை புரியக்கூடிய இளம் சமுதாயத்தினரை குறித்த கிராமத்தில் குடியேற்ற வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பது மறுக்க முடியாத உண்மையாக காணப்படுகின்றது.



- 18 ஆம் பக்க தொடர்ச்சி......

தமிழ்த் தேசிய அரசியலை நீக்கம் செய்யும் செயற்பாடாக மறு தரப்பினரும் மாற்ற முனைந்த நிகழ்ச்சியே இம்முறை நடந்து இருக்கிறது. இதில் நினைவேந்தலை வெறும் அஞ்சலி நிகழ்வாக சித்தரித்து, தூக்குகாவடி எடுத்து, சைவால யங்களில் நடக்கும் திருவிழா போன்று அதனை மாற்றி நினைவேந்தலின் பின்னாலுள்ள தமிழ் தேசிய அரசியலை நீக்கம் செய்ய முனையும் குழுக்கள் தொடர்பாக நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

அதேபோன்று, நினைவேந்தலை தமது கட்சியின் ஏகபோக உரிமையாக காட்ட முனையும் கட்சிகள் பற்றியும் நாம் விழிப்பாக இருக்க வேண்டும். தியாக தீபம் நினைவு நாட்களான பன்னிரு நாட்களும் காலையில் இருந்து இரவு வரை பாடசாலை பிள்ளைகளில் இருந்து வயதானவர்கள் வரை பலரும் அஞ்சலி செலுத்தி வந்தனர். இந் நிலையில் நினைவு நாள் தொடங்கி நான்காவது நாளில் திடீரென அவசர அவசரமாக பொதுக் கட்டமைப்பு உருவாக்கும் முனைப்பு ஒன்று யாழ் மாநகரசபை முதல்வரினால் முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் மயப்படுத்தப்பட வேண்டிய நினைவேந்தல் நிகழ்வை அதிகாரமயப்படுத்தும் ஒரு முயற்சியாகவே இதனைப் பார்க்க வேண்டி உள்ளது. ஆயினும் குறித்த பொதுக் கட்டமைப்பு அவசர அவசரமாக உருவாக்கப்பட்டது. மக்களின் பரவலான பங்களிப்பு இன்றி உருவாக்கப்பட்ட இந்தப் பொதுக் கட்டமைப்பு அங்கீகாரம் இல்லாததாகவும் பலம் இல்லாததாகவும் இருந்தது. அதன் காரணமாக இந்தப் பொதுக் கட்டமைப்பு தியாக தீபம் போராடிய தமிழ் தேச அரசியலை முன்னெடுக்காமல் அதற்கு எதிரானவர்களின் ஆளுமைக்கு உட்பட்டுப் போனது. இப்படியாக அவசர அவசரமாக ஒரு நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பை யாழ்ப்பாண மாநகர முதல்வர் உருவாக்கியமை தான் இந்தக் குழப்பத்துக்கு எல்லாம் அடிப்படைக் காரணம் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது.

பெரும்பாலான மக்களின் அங்கீகாரத்துடன் வலுவான பொதுக் கட்டமைப்பை அமைப்பதன் மூலம் தான் அடுத்த முறை நினைவேந்தலை சிறப்பாக நடத்த முடியும். அரசியல் கட்சிகளின் தலையீட்டையும் உட்கட்சி சண்டைகளையும் முற்றாக விரட்டி அடிக்கின்ற பண்பை கொண்டதாக அந்த அமைப்பு இருக்க வேண்டும். ஆயுதப் போராட்ட காலங்களில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் எவ்வாறு தமிழர் தாயகமெங்கும் உணர்வு பூர்வமாக அனுட்டிக்கப்பட்டது என்பதை சற்று எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. கிராமங்களில் வீடுகளின் முன்பு மரத்தடிகளினால் சிறிய பந்தல் போடுவார்கள். பச்சைத் தென்னை ஓலையால் பின்னி வாழை மடல்களையும் கொண்டு சுற்றி அலங்கரிப்பார்கள். பந்தலில் வைப்பதற்கு தியாக தீபத்தின் வர்ணப் படம் வேண்டி நினைவேந்தல் தொடக்க நாள் அன்று வெளியாகும் பத்திரிகைகளின் நடுப் பக்கத்துக்காக எதிர்பார்த்து இருப்பார்கள். எதிர்பார்ப்பு வீண் போகாமல் திலீபனின் வர்ணப் படம் வந்திருக்கும். அதனை காகித அட்டையில் ஒட்டி பந்தலுக்குள் வைத்து தினமும் பூக்கள் தூவி, தீபமேற்றி வழிபடுவார்கள். ஒவ்வொரு வீட்டு வாசல்களும் இவ்வாறு அலங்கரிக்கப்பட்டு இருக்கும். இவ்வாறாக நினைவேந்தல் மக்கள் மயப்பட்டிருந்தது. உணர்வு மயப்பட்டிருந்தது.

திலீபனின் நினைவு வாரம் முழுவதும் மரநடுகை, மாணவர்களுக்கு இடையே சித்திரப் போட்டி, பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள் என்பன உட்பட சமூகம் சார்ந்த பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெறும். இவற்றினூடாக தியாக தீபத்தின் அரசியற் கோட்பாடு மக்களிடையே கடத்தப்பட்டது, பரப்பப் பட்டது. ஒரு துளி நீர் கூட இறுதி வரை அருந்தாது அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்து தமிழ் மக்களின் மனதில் நீங்காத இடம் பிடித்த திலீபனை என்றும் நினைவில் இருத்துவோம். அந்த நினைவேந்தல் நாட்களில் அவர் முன்னெடுத்த தமிழ்த் தேசிய அரசியலை உயர்த்திப் பிடிப்போம். அந்த நாட்களுடன் நின்று விடாது ஏனைய நாட்களிலும் அவரின் கனவை நனவாக்கப் பாடுபடுவோம்.



# நினைவேந்தல்களில் அரசியல் பேசக் கூடாதா?



**- துருவன் -**

நினைவேந்தல்களில் அரசியல் பேசக் கூடாது என்று இப்போது ஒரு சாரார் பேசத் தொடங்கியுள்ளனர். தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல்களின் போதும் இப்படியான குரல்கள் ஒலித்தன. ஆயுதப் போராட்டத்தை நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த திலீபன் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சை வழி நின்று உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். பன்னிரு நாட்களும் ஒரு சொட்டு நீரும் அருந்தாது தனது கொள்கையில் உறுதியாக நின்றார். அவரது கோரிக்கைகளை இந்திய - இலங்கை அரசுகள் ஏற்க மறுத்த நிலையில் இறுதியில் தாய் மண்ணின் விடுதலைக்காக தன்னுயிரை அர்ப்பணித்தார்.

இன்றும் அந்த ஐந்து கோரிக்கைகள் வலுவாக உள்ளன. ஆனால், திலீபனின் அகிம்சை போராட்டத்தின் பின்னுள்ள அரசியலை பேசாமல் வெறுமனே விளக்கேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்துவது, தூக்குகாவடி எடுப்பதோடு நமது கடமை முடிந்து விட்டதாக எண்ணக் கூடாது. தியாக தீபம் திலீபனின் ஒப்பற்ற தியாகம் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும். அடுத்த தலைமுறைப் பிள்ளைகளுக்கும் கடத்தப்பட வேண்டும். அதன் பின்னாலுள்ள அரசியலும் உரத்துப் பேசப்பட வேண்டும். அப்போது தான் ஆயுத வழியில் அல்ல. ஜனநாயக வழியிலும் ஒலித்த எங்கள் குரல்வளை நெரிக்கப்பட்ட விடயம் சர்வதேசத்துக்கும் தெரியவரும்.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியம் சார்ந்து பயணிப்பவர்கள் பாதுகாப்பு தரப்பினரின் அச்சுறுத்தலையும் மீறி திலீபனின் நினைவேந்தலை அனுட்டித்தார்கள். அதில் மக்களும் பங்கு கொண்டனர். அகிம்சை வழியில் உயிர்நீத்தவருக்கு கூட நினைவேந்த தடை விதிக்கப்பட்டு எழுந்த அச்சுறுத்தல்களையும் தாண்டி நினைவேந்தல் இடம்பெற்றது. இன்று நினைவேந்தல்களுக்கு ஒரு வெளி திறக்கப்பட்டிருக்கும் நிலையில் நினைவேந்தல்கள் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும். கட்சிகள் நினைவேந்தல்களை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அங்கு மக்களை முன்னிலைப்படுத்த வேண்டும். நினைவேந்தல்களுக்கு படையினரின் அச்சுறுத்தல் இருந்த காலத்தில் மக்கள் வெளிப்படையாக இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமல் இருந்திருக்கலாம். அதனை வைத்துக் கொண்டு மக்கள் அக்காலங்களில் உணர்வற்று இருந்தார்கள் என்று சொல்ல முடியாது.

தடைகள் தளர்த்தப்பட்டு மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் நினைவேந்தல்களை தமது கட்சிச் செயற்பாடாக கருதாமல் மக்களின் செயற்பாடாக மாற்ற கட்சிகள் முன்வர வேண்டும். அப்படி இருந்தால் தான் மக்களும் அதிகளவில் பேரெழுச்சியுடன் திரள்வார்கள். கட்சிகளும் வேறு தரப்புகளும் பிழையான வழியில் நினைவேந்தலை கொண்டு செல்லும் முயற்சியை மக்கள் தடுப்பார்கள். அதனூடாக தமிழ்த் தேசத்தின் விடுதலை அரசியல் மக்களாலேயே முன்னெடுக்கப்படும். மறுபுறத்தில், தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கும் கட்சிகளுக்கும் அவர்களின் ஆதரவு கிடைக்கும். தமிழ்த் தேசிய அரசியலை இனிவரும் தலைமுறையினரிடம் முறையாக கடத்துகின்ற இடமாக பார்க்காமல் திலீபனின் நினைவேந்தலை தமது கட்சியின் செயற்பாடாக ஒரு தரப்பினரும்,

- 17 ஆம் பக்கம் பார்க்கவும்......